1974 மார்ச் 20]

இறந்தவர்களின் எண்ணிக்கையை நாம் அறிந்து இருக்கும்போது அந்த இறப்புக்குக் காரணமாக உள்ளவர்கள் எத்தனை பேர், கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர், கண்டுபிடிக்கப்படாமல் 'ஹிட் அண்டு ரன்' என்ற வகையில் உள்ளவர்கள் எத்தனை பேர், இந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 'ஹிட் அண்டு ரன்' என்கிற வகையில் இருக்கிற எண்ணிக்கை வேண்டுமானால் தனிக் கேள்வி போடவேண்டும். இது பாதசாரிகள் பாதைகளைக் கடக்கிறபோது, அதற்கென்று வகுக்கப்படுகின்ற பாதையை விட்டு வேறு இடங்களில் ரோடைக் கடப்பதன் காரணமாகத் திடீரென்று ஏற்படுகிற விபத்துக்களின் எண்ணிக்கையாகும்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, இப்போது பாதையைக் கடந்து செல்ல 'சப்-வேக்கள்' வைத்து இருக்கிறார்கள். அது சுத்தமாக இல்லை. இரவிலே சரியான விளக்குகள் இல்லாததன் காரணமாக இரவு நேரத்தில் அந்தப் பாதையைப் பயன்படுத்த அஞ்சுகிறார்கள். ஆகவே, அதற்கு காவலர்களைப் போடுவதற்கு அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, சுத்தமாக வைத்துக்கொள்ளவில்லை என்று தகவல் இருக்குமானால் சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் இரவு நேரங்களில் நிச்சயமாக இவ்வளவு பெரிய நெரிசல் இருக்காது என்றுதான் நான் கருதுகிறேன்.

Season tickets in buses

* 528 *Q.*—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state whether season tickets are issued in the buses run by the State Transport Department and the Cheran, Cholan, Pandian and Anna Transport Corporations?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

@ 231–234-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 மார்ச் 20

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இங்கே வைக்கப் பட்டிருக்கிற அறிக்கையில் நம்முடைய சட்டமன்றத்திற்கு வருகின்ற பத்திரிகை நிருபர்கள், வானொலி செய்தி நிருபர்கள், இப்படிப்பட்டவர்களுக்கு 31—3—1974 வரையில் பாஸ் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கு மேல் அவர்களுக்கு பாஸ் கிடையாது என்ற தகவல் இருக்கிறது. அவர்களுக்கு இலவச பாஸ் தொடர்ந்து கொடுக்கும் சலுகையை நமது அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கூடுமான வரையில் ஆங்காங்கு இருக்கும் போக்குவரத்துக் கழகங்கள் நிருபர்களுக்கு, அவர்கள் சுலபமாகச் சென்று செய்திகளைச் சேகரிக்கும் பொறுப்பில் இருப்பதால், இலவச பாஸ் வழங்கிக் கொண்டு வருகிறார்கள். வழங்கிக்கொண்டு வந்தது பாதியில் நின்று விடும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அச்சப் படத் தேவையில்லை. அது உரிய முறையில் பரிசீலிக்கப்படும்.

திரு. பூ. எட்டியப்பன்: தலைவரவர்களே, சட்டமன்ற உறுப் பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும் கொடுத்து இருக்கும் அந்த அரசாங்க பாஸானது மற்றப் போக்குவரத்து களிலே அனுமதிப்பதற்கு இல்லை என்று சொல்கிறார்கள். காரணம் என்னவென்றால் அரசுப் போக்குவரத்து என்றுதான் அதிலே இருக்கிறதே தவிர, சேரன், சோழன், பாண்டியன் என்று இல்லை. எங்களுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அவர்களுக்கு வேறு தனி சம்பள உயர்வு உண்டு என்று குறை கூறுகிறார்கள். இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப் பினர்களுக்கு அளிக்கப்பட்டு இருக்கின்ற பாஸானது எல்லாப் போக்குவரத்துக் கழகங்களிலும் செல்லும்.

மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள கடைகள்

* **529 வினா.—திரு. த. சோனையா**: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலுள்ள கடைகளை வெளிப் பிரகாரத்திற்கு கொண்டுவரும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா?